**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**29 மே 2015 / 12 ஷஃபான் 1436**

# <u>இறைநம்பிக்கையை மேன்மையாக்கும் கல்வியறிவு</u>

اَلْحَمْدُ للهِ الْمَلِكِ الْحَقِّ الْمُبِيْنِ الَّذِي أَبَانَ لِعِبَادِهِ مِنْ آيَاتِهِ مَا
بِهِ عِبْرَةً لِلْمُعْتَبِرِيْنَ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللّهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ
لَهُ إِلَهَ الأَوَّلِيْنَ وَالآخِرِيْنَ وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّداً عَبْدُهُ
وَرَسُوْلُهُ الْمَبْعُوثُ رَحْمَةً لِلْعَالَمِيْنَ. اَللَّهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا
مُحَمَّدٍ وَ عَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْماً كَثِيْرًا . أَمَّا بَعْدُ فَيَا
عِبَادَ اللّهِ اتَّقُوْا اللّهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ مُسْلِمُوْنَ.

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது "தக்வா" எனும் பயபக்தியை அதிகரித்துக் கொள்வோமாக! அருள்மிக்க "ஷஃபான்" மாதத்தை முன்னிட்டு, அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பது, அவன் தடுத்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்தும் தவிர்ந்திருப்பது போன்றவற்றின் மூலம் அல்லாஹ்

சுப்ஹானஹு வதஆலாவின் நெருக்கத்தைப் பெற வேண்டுமென்ற நமது தீர்மானத்தைப் புதுப்பித்துக் கொள்வோமாக!

அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

இம்மாதம் முழுவதும் நிகழ்த்தப்பட்ட ”குத்பா” பிரசங்கங்களில், ”ஈமான்” (இறை நம்பிக்கை) மற்றும் ”தக்வா” வின் முக்கியத்துவம், இம்மையிலும் மறுமையிலும் நமது வாழ்க்கைத் தரத்தை எவ்வாறு முன்னேற்றுவது போன்ற கருத்துக்கள் பலமுறை எடுத்துரைக்கப்பட்டன. நமது இறைநம்பிக்கையை நாம் புதுப்பித்து, பலப்படுத்திக் கொள்ளவில்லையெனில் நம்மிடமிருந்து நமது இறைநம்பிக்கை மிக விரைவில் மங்கி மறைந்து விடும்.

நபி(ஸல்) அவர்கள் ஹதீதில் நவின்றுள்ளார்கள்:

”உங்களில் ஒருவர் ஆடையைக் கழற்றுவது போல் இறைநம்பிக்கையும் உள்ளங்களை விட்டும் கழன்று விடும். எனவே உங்கள் உள்ளங்களில் இறைநம்பிக்கை புதுப்பிக்கப்பட வேண்டுமென அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்ளுங்கள்” (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் ஹாகிம் ரஹ், இமாம் தப்ரானீ ரஹ்)

எனவே, எனது சகோதரர்களே! நாம் நமது உள்ளங்களிலுள்ள ஈமானின் நிலையை அடிக்கடி கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டும். நமது இறைநம்பிக்கையை அதிகரித்து, செழிக்கச் செய்கின்ற விஷயங்கள் யாவை? நமது இறைநம்பிக்கையை எவ்விஷயங்கள் பலப்படுத்தும்? என நாம் சிந்திக்க வேண்டும். எனது சகோதரர்களே! நான் இவ்வாறு சிந்திக்கச் சொல்வதற்குக் காரணம், மனிதர்களில் சிலர், இறைநம்பிக்கையின்

பெயரால் நாசம் மற்றும் அழிவுகளை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். அம்மனிதர்கள் தமது செயல்களை தமது இறைநம்பிக்கையின் ஒரு பகுதி எனக் கருதுகின்றனர். அவர்களிடம் காணப்படும் குறைவான கல்வியறிவு, கருத்துகளைத் திரித்துக் கூறுதல் மற்றும் தவறாகப் புரிதல் போன்றவற்றின் காரணமாகவே அவ்வாறு கருதுகிறார்கள். நிச்சயமாக, உண்மையான "ஈமான்" தீய செயல்களைச் செய்யுமாறு ஒருபோதும் தூண்டாது. உண்மையான "ஈமான்" நன்மையையும் அமைதியையுமே ஏற்படுத்தும்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "அஸ்-ஸபா" எனும் அத்தியாயத்தில் கூறுகின்றான்:

وَيَرَى ٱلَّذِينَ أُوتُوا۟ ٱلْعِلْمَ ٱلَّذِىٓ أُنزِلَ إِلَيْكَ مِن رَّبِّكَ هُوَ ٱلْحَقَّ
وَيَهْدِىٓ إِلَىٰ صِرَٰطِ ٱلْعَزِيزِ ٱلْحَمِيدِ ٦

பொருள்: (நபியே!) எவர்களுக்கு வேதம் கொடுக்கப்பட்டதோ அவர்களில் உள்ள சத்தியவான்கள் உங்களுக்கு இறக்கப்பட்ட இவ்வேதத்தை உங்கள் இறைவனால் இறக்கப்பட்ட உண்மையான வேதமென்றும், அனைவரையும் மிகைத்த, மிக்க புகழுக்குரியவனின் நேரான வழியை அறிவிக்கக் கூடியது என்றும் எண்ணுவார்கள். (அஸ்-ஸபா: 6)

கல்வியறிவின் மூலமாகவே நாம் நமது ”அகீதா” (கொள்கையைப்) பலப்படுத்த முடியும். நமது உள்ளங்களிலுள்ள ஈமானை மேம்படுத்த முடியும். பொய்யிலிருந்து உண்மையைப் பிரித்துப் பார்க்கும் ஆற்றலையும், தெளிவில்லாத விஷயத்திலிருந்து தெளிவான விஷயத்தைத் தேர்ந்தெடுக்கும் ஆற்றலையும் கல்வியறிவு தான் வழங்குகிறது. சன்மார்க்கக் கல்வியறிவும் இதே வேலையைத் தான் செய்கிறது. சன்மார்க்கக் கல்வியறிவு நமது வாழ்க்கையில் வழிகாட்டுவதாகும். ஒழுங்கீனத்தையோ அல்லது இழப்பையோ ஏற்படுத்துவது அல்ல. அடிப்படையில், கல்வியறிவு தான் மார்க்கம் ஆகும்; எனவே, நமது மார்க்கத்தை நாம் எங்கே கற்றுக் கொள்கிறோம் எனச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்” என நமது உலமா பெருமக்கள் நமக்கு நினைவுபடுத்தியுள்ளார்கள்.

எனினும், எனது அன்பிற்குரிய சகோதரர்களே! அவ்விதமான சன்மார்க்கக் கல்வியறிவை நாம் எவ்வாறு அடைவது? எனும் கேள்வி இங்கு எழுகிறது. கல்வியறிவின் நான்கு முக்கியமான அம்சங்களை உலமா பெருமக்கள் நமக்கு நினைவுபடுத்தியுள்ளார்கள். அவை பின்வருமாறு:

1, மதி நுட்பம் 2. கல்வியறிவைப் போதிக்கத் தகுதியான ஆசிரியர் 3, சரியென நிரூபிக்கப்பட்ட புத்தகங்கள் 4, கல்வியறிவைத் தேடுவதில் தொடர் முயற்சிகள்.

மேற்கண்ட நான்கு அம்சங்கள் காணப்படவில்லையெனில் அல்லது அவற்றின் பால் கவனம் செலுத்தப்படவில்லையெனில், கல்வி கற்கும் முயற்சிகள், செயல்பாடுகள் தூய்மையற்றதாக ஆகி விடும். சன்மார்க்கப் போதனைகளைப் புரிந்து கொள்வதில் நாம் கவனக் குறைவாக இருந்தால் அதன் விளைவு நஷ்டமாகவே இருக்கும். வித்தியாசமான சன்மார்க்கக்

கருத்துகளின் காரணமாக எத்தனையோ குடும்பங்கள் பிரிந்து வாழ்கின்றன. அவர்கள் அடிக்கடி விரோதத்தை வெளிப்படுத்திக் கொள்கிறார்கள். எத்தனையோ வழி தவறியப் போதனைகள் முஸ்லிம் சமூகத்தால் ஏற்கப்படுகின்றன. ”இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் இறைவனடி சேர்ந்த பின்பு சில தனிநபர்கள் இன்னும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து ”வஹீ” எனும் இறை ஞான உதயத்தைப் பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள்” எனச் சிலர் நம்புகிறார்கள். சிலர், தம்மை இறைவனின் அவதாரம் எனவும் சொல்லிக் கொள்வதைக் கேள்விப்பட்டிருக்கின்றோம். தீவிரமானப் போதனைகளைச் செய்து வரும் சிலர், திருக்குர்ஆன் வசனங்களையும் சன்மார்க்கக் கருத்துக்களையும் பயங்கரவாதத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கில் திரித்துக் கூறி வருவதையும் காண்கிறோம். மறுபுறம், இணையதளங்களில் கட்டுப்படுத்த முடியாத வகையில் எல்லையில்லா தகவல்கள் பரப்பப்படுகின்றன. எனவே, நாசத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கில் செயல்பட்டு வரும் சில வகுப்பார்கள், தமது தவறானப் போதனைகளையும் கருத்துகளையும் பரப்புவதற்கு இணையதளத்தைச் சாதனமாகப் பயன்படுத்துகிறார்கள்.

நாம் நிச்சயம் சகிப்புத் தன்மையுடன் இருப்பது அவசியமாகும். வழி தவறியப் போதனைகள் எப்போதும் தனக்கு ஆதரவுகளைத் திரட்டிக் கொண்டே தான் இருக்கும்; அதற்கான ஆற்றலையும் அவை பெற்றுள்ளன. அவ்வாறு செய்வது அவற்றிற்கு அவசியமாகும். இல்லையெனில் அவற்றைப் பின்பற்றுபவர்கள் எவரும் இருக்கமாட்டார்கள். தவறானப் போதனைகளின் முக்கியக் கவர்ச்சியான விஷயங்கள் யாவை? எனச் சிந்திக்க வேண்டும். பொதுவாக, தவறானப் போதனைகள் ”நாம் தான் முக்கியமானவர்கள், பிரத்தியேகமானவர்கள்” என்ற சிந்தனையின் பால்

நம்மை அழைக்கின்றன. நாம் அப்போதனைகளை நம்பி விடும் போது, அவற்றைப் போதிப்பவர்களின் பிரத்தியேக சங்கத்தில் இடம் பெற்று விடுகின்றோம். அச்சங்கத்தில் அவர்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் மட்டுமே இணைய முடியும். அதன் காரணமாக, அவர்கள் தம்மைத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகக் கருதிக் கொள்கிறார்கள். அவர்கள் தாம் நேரான பாதையில் இருப்பதாகவும், மற்றவர்கள் தவறான பாதையில் இருப்பதாகவும் கருதுகிறார்கள். எனவே அவர்களை எதிர்த்து சண்டையிட்டு அவர்களை அழிப்பது அவசியம் எனவும் நினைக்கின்றார்கள். எனது அன்பிற்குரிய சகோதரர்களே! இவ்விதமான தவறானப் போதனைகளினால் ஏற்படும் ஆபத்துகளின் விஷயத்தில் நாம் மிகவும் கவனமாக இருப்பது அவசியமாகும்.

முஸ்லிம்கள் ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் கட்டிக் காப்பவர்கள் ஆவர். ஒரு கொள்கை அறியப்பட்டதாக, ஆய்வு செய்யப்பட்டதாக, ஒட்டுமொத்த சமுதாய மக்களால் பின்பற்றப்படுவதாக இருக்கும் காலமெல்லாம் அக்கொள்கை சிறப்பானதாக, நன்கு வழிகாட்டப்பட்ட தாகவே இருக்கும். அவ்விதமானப் போதனைகளும் கொள்கைகளும் நம்மை மேற்கொண்டு சிறப்பானவர்களாக, மற்றவர்களை விட மேன்மையானவர்களாக ஆக்கும். இதனடிப்படையில், ”சையன்ஸ்” என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். பொதுவாக அனைவராலும் பின்பற்றப் பட்டதாகும். அறிஞர்களால் ஏகோபித்து, போற்றப்பட்டதாகும் என்பதை நாம் உணர வேண்டும். இறைத்தூதர்(ஸல்) நவின்றுள்ளார்கள்:

”எனது சமுதாயத்தில் அனைவரும் தவறின் மீது ஒன்று கூட மாட்டார்கள்” (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் அஹ்மது ரஹ், இமாம் தப்ரானீ ரஹ்)

ஒருவர் பேசும் ஆற்றலைப் பெற்றிருப்பதால் மட்டும், சன்மார்க்க ஆசிரியராகவோ, போதிப்பதற்கான அங்கீகாரத்தைப் பெற்றவராகவோ அவர் ஆகி விட முடியாது. அவரது பின்னணியை ஆராய வேண்டும். அவரது போதனையை, பொதுமக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மற்ற சன்மார்க்க அறிஞர்களின் போதனைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். நாம் படிப்பதை அதிகரிக்க வேண்டும்; பல்வேறு நூல்களைப் படிக்க வேண்டும். இறுதியாக, சகோதரர்களே! அல்லாஹ் திருக்குர்ஆனின் ”அல்-கஹ்ஃப்” எனும் அத்தியாயத்தின் 103-104 வரையிலான வசனங்களில் எவர்களைப் பற்றி குறிப்பிடுகின்றானோ அவர்களைப் போன்று நாம் ஆகி விடக் கூடாது. அல்லாஹ் கூறுகிறான்:

”(பாவமான) காரியத்தில் இவர்களை விட நஷ்டமடைந்தவர்களை நாம் உங்களுக்கு அறிவிக்கவா?” என்று (நபியே!) நீங்கள் கேளுங்கள். அவர்கள் (யாரென்றால்) இவ்வுலகில் தவறான வழியிலேயே முயற்சி செய்து கொண்டு, தாங்கள் மெய்யாகவே நல்ல காரியங்களையே செய்வதாக எண்ணிக் கொள்வார்கள்.

இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களால் போதிக்கப்பட்ட பின்வரும் துஆவை நாம் அதிகமாக ஓதிக் கொள்வோமாக!:

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ عِلْمٍ لا يَنْفَعُ ، وَدُعَاءٍ لا يُسْمَعُ ، وَقَلْبٍ لا يَخْشَعُ ، وَنَفْسٍ لا تَشْبَعُ ، اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ هَؤُلاءِ الأَرْبَعِ

பொருள்: யா அல்லாஹ்! பயன் தராத கல்வி, ஏற்கப்படாத பிரார்த்தனை, (இறைவனைப்) பயந்து கொள்ளாத உள்ளம், திருப்தி பெறாத ஆத்மா ஆகிய இந்த நான்கை விட்டும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்கு பாவமன்னிப்பையும், உண்மையான, பயனுள்ள கல்வியைப் பெறும் ஆற்றலையும் வழங்கு வானாக! அல்லாஹ்வை நாம் சந்திக்கின்ற வரை நமது ஈமானைப் பாதுகாப்பதற்கு அல்லாஹ் நமக்குத் தொடர்ந்து வழிகாட்டி அருள் புரிவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيمِ ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيعُ الْعَلِيمُ ، أَقُولُ قَوْلِي هذَا وَأَسْتَغْفِرُ اللَّهَ الْعَظِيمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِينَ وَالْمُسْلِمَاتِ ، وَالْمُؤْمِنِينَ وَالْمُؤْمِنَاتِ ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِينَ وَيَا نَجَاةَ التَّائِبِينَ.